# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**அதி விசேஷமானது**

අංක 2468/06 - 2025 දෙසැම්බර් මස 23 වැනි අඟහරුවාදා - 2025.12.23

2468/06 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 23 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம்**

**2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகள்**

2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க, கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டத்தின் 11 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் அதன் 17 ஆம் பிரிவின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

கொழும்பு,
2025, திசெம்பர் 19.

ஒழுங்குவிதிகள்

2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகளுக்கான திருத்தங்கள்

1. இவ்வொழுங்குவிதிகள், 2025 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.


1 - PG 7422 - 378 (2025/12)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2. 2024, ஏப்பிறல் 30 ஆந் திகதியிடப்பட்ட 2382/11 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்ட 2024 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் ஒழுங்குவிதிகள் இத்தால் பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றன:-

2.1 ஒழுங்குவிதி 3 இத்தால் நீக்கப்பட்டு அதற்கு பின்வரும் புதிய ஒழுங்குவிதிகள் பதிலீடு செய்யப்படுகின்றன.

3. இவ்வொழுங்குவிதிகளின் நோக்கத்திற்காக "பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை" என்பது தொடர்பூட்டல், செய்தி, மாற்றல் வாயிலாக, அல்லது பதிவு செய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகள் வழங்குநர் உரித்தாக்கின்ற தீர்ப்பனவு வலையமைப்பு ஊடாக பணத்தின், காசோலைகளின், வேறு நாணயச் சாதனங்களின் அல்லது பெறுமதிச் சேமிப்புக்களின் ஏற்றுக்கொள்ளலை அத்துடன் பயன்பெறுநரொருவருக்குப் பணமாக அல்லது வேறு வடிவங்களில் நேரொத்த தொகையொன்றின் கொடுப்பனவை ஈடுபடுத்துகின்ற நிதியியல் சேவைகள் என்று பொருள்படும். அத்தகைய கொடுக்கல் வாங்கல்கள் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட இடையீட்டாளர்களையும் மூன்றாம் திறத்தவரொருவருக்கான இறுதிக் கொடுப்பனவொன்றினையும் உள்ளடக்கலாம் அத்துடன் ஒரு இடத்திலிருந்து இன்னுமொரு இடத்திற்கு; அதாவது

(i) இலங்கையினுள் ;
(ii) ஏதேனும் வேறு நாட்டிலிருந்து இலங்கைக்கு; அல்லது
(iii) இலங்கையிலிருந்து ஏதேனும் வேறு நாட்டுக்கு,

ஆனதாகவிருக்கலாம்.

ஆயின், மேலே (ii) மற்றும் (iii) விடயங்களில் குறிப்பீடு செய்யப்பட்ட சேவைகள் 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு உட்பட்டு மேற்கொள்ளப்படுதல் வேண்டும்.

2.2 ஒழுங்குவிதி 5 பின்வருமாறு திருத்தம் செய்யப்படுகின்றது.

(அ) துணை ஒழுங்குவிதி 5(அ) இனை நீக்கி, அதற்கு பின்வரும் புதிய ஒழுங்குவிதியை பதிலீடு செய்வதன் மூலம்:-

5.(அ) பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர் தொழிலில் ஈடுபடுவதற்கான அல்லது பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநரொருவராக தொழிற்படுவதற்கான பதிவொன்றிற்காக விண்ணப்பிப்பதற்குத் தகைமையுடையவராகவிருக்கும் பொருட்டு, ஆளொருவர் -

(i) 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பொருள்கோடலினுள் உத்தரவாதமொன்றின் மூலம் வரையறுக்கப்பட்ட கம்பனியொன்றினை அல்லது கரைகடந்த கம்பனியொன்றினை தவிர, குறைந்தது பதினைந்து மில்லியன் ரூபாய் (15 மில்லியன்)அல்லது மத்திய வங்கியினால் நிர்ணயிக்கப்பட்ட அத்தகைய வேறு தொகையினைக் கொண்ட சேதமிழக்காத மூலதனமொன்றைக் கொண்டுள்ள 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றாக; அல்லது பணம் அல்லது பெறுமதி மாற்றல் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக, தொடர்புடைய நாட்டின் மத்திய வங்கியினால், அரசாங்கத்தினால் அல்லது ஏதேனும் வேறு ஒழுங்குமுறைப்படுத்தல் அதிகாரியினால் உரிமம்பெற்ற, பதிவு செய்யப்பட்ட, அதிகாரமளிக்கப்பட்ட, அனுமதிக்கப்பட்ட குறைந்தபட்சம் ஐ.அ. டொலர் 200,000 (ஐ.அ. டொலர் இரு நூறாயிரம்) அல்லது ஏதேனும் வேறு வெளிநாட்டு நாணயத்தில் அதற்குச் சமமான தொகையினைக் கொண்ட சேதமிழக்காத மூலதனத்தைக் கொண்ட இங்கைக்கு வெளியே பதிவு செய்யப்பட்ட கம்பனியொன்றாகவிருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கையினுள் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநரொருவரின் தொழில்களை மற்றும் நடவடிக்கைகளை பிரத்தியேகமாகக் கொண்டு நடாத்தல் வேண்டும் ; அத்துடன்

(iii) பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்கலிற்கான முறைமையொன்றை அல்லது நன்கு வரைவிலக்கணம் செய்யப்பட்ட பொறிமுறையொன்றைப் பேணுதல் அல்லது தொழிற்படுத்தல் வேண்டும்.

(ஆ) துணை ஒழுங்குவிதி 5(இ) இனை நீக்கி, அதற்கு பின்வரும் புதிய ஒழுங்குவிதியை பதிலீடு செய்வதன் மூலம்:-

5(இ) இலங்கையிலும் சரி அல்லது இலங்கைக்கு வெளியிலும் சரி கூட்டிணைக்கப்பட்ட அத்துடன் மத்திய வங்கியினால் அல்லது ஏதேனும் வேறு ஒழுங்குமுறைப்படுத்துநரினால் அல்லது அரசாங்க நிறுவனத்தினால் வழங்கப்பட்ட ஏதேனும் உரிமம், அனுமதி, அல்லது அதிகாரமின்றி ஏற்கனவே சேவைகளை வழங்குகின்ற தற்போதுள்ள பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் பதிவுச் சான்றிதழொன்றுக்காக 2026.03.31 அன்று அல்லது அதற்கு முன்னர் விண்ணப்பித்தல் வேண்டும் என்பதுடன் அவர்களது விண்ணப்பம் தொடர்பில் மத்திய வங்கியிடமிருந்து தொடர்பூட்டலொன்றை அவர்கள் பெற்றுக் கொள்ளும் வரை அவர்களது தொழிலைத் தொடர்வதற்கு அனுமதிக்கப்படுதல் வேண்டும். ஆயின், பதிவு செய்வதற்கான சான்றிதழுக்கான விண்ணப்பம் குறித்துரைக்கப்பட்ட காலப்பகுதியினுள் உரியவாறு சமர்ப்பிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

2.3 துணை ஒழுங்குவிதி 7(ஈ) இத்தால் நீக்கப்படுகின்றது.

2.4 ஒழுங்குவிதி 12 இத்தால் நீக்கப்படுவதுடன் அதற்கு பின்வரும் புதிய ஒழுங்குவிதி பதிலீடு செய்யப்படுகின்றது :-

12. பதிவு செய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகள் வழங்குநர்களின் முகவர் எவரும் அப்போதைக்கு வலுவிலிருக்கின்ற ஏற்புடைய சட்டத்தின் நியதிகளுக்கமைய விடயத்திற்கேற்ப உரிமத்தின், அனுமதியின், அதிகாரமளித்தலின் அல்லது பதிவின் அதிகாரத்துடன் தவிர, பின்வரும் எவையேனும் நடவடிக்கைகளில் ஈடுபடலாகாது :

(அ) வைப்புகளை ஏற்றல் ;

(ஆ) வெளிநாட்டுச் செலாவணி வணிகங்கள்;

(இ) கடன்களை வழங்குதல் ;

(ஈ) 2023 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டம், 1988 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க வங்கித்தொழில் சட்டம், 2011 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க நிதித் தொழில் சட்டம், 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க வெளிநாட்டுச் செலாவணிச் சட்டம், 1923 ஆம் ஆண்டின் 08 ஆம் இலக்க உள்நாட்டுத் திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டம், 1937 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க பதிவு செய்யப்பட்ட பங்கு மற்றும் பிணையங்கள் கட்டளைச் சட்டம், 2005 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க கொடுப்பனவு மற்றும் தீர்ப்பனவு முறைமைகள் சட்டம், அல்லது அத்தகைய சட்டங்களுக்கான ஏதேனும் திருத்தங்கள் அல்லது அவற்றின் கீழ் வழங்கப்பட்ட கட்டளைச் சட்டங்கள் அல்லது ஏதேனும் ஒழுங்குவிதிகள் உள்ளடங்கலாக ஏதேனும் சட்டத்தின் கீழ் உரிமமொன்றினை, அனுமதியினை, அதிகாரமளித்தலினை அல்லது பதிவினை வேண்டுகின்ற நடவடிக்கைகள்

(உ) ஏதேனும் வேறு சட்டம் அல்லது மத்திய வங்கியினால் வழங்கப்பட்ட பணிப்புரை, ஒழுங்குவிதிகள் மூலம் கட்டுப்படுத்தப்படும் நடவடிக்கைகள்

2.5 ஒழுங்குவிதி 13 இத்தால் நீக்கப்படுவதுடன் அதற்கு பின்வரும் புதிய ஒழுங்குவிதி பதிலீடு செய்யப்படுகின்றது :-

13. மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதி 5(அ)(i) இன் கீழ் இலங்கையில் கூட்டினைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்கள் பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவைகள் வழங்கும் தொழிலொன்றாக தவிர, 'வங்கி', 'நிதியியல் நிறுவனம்', 'முதலீட்டுக் கம்பனி', 'பணம் அல்லது நாணயப் பரிமாற்றல்', 'உண்மைச் சொத்து', அல்லது வேறு எவையேனும் நடவடிக்கைகளை சுட்டுகின்ற சொற்கள் போன்ற பதங்களை அவர்களின் பெயரில் உள்ளடக்குதலாகாது.

ஆயின், இவ்வொழுங்குவிதிகளின் வரையறைகள் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட பதிவு செய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநர்களுக்கு ஏற்புடைதலாகாது.

2.6 ஒழுங்குவிதி 14 இத்தால் நீக்கப்படுவதுடன் அதற்கு பின்வரும் புதிய ஒழுங்குவிதி பதிலீடு செய்யப்படுகின்றது :-

14. ஒவ்வொரு பதிவு செய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநரும் :-

(அ) பதிவு செய்யப்பட்ட பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநரின் பெயர் ;

(ஆ) பதிவு செய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி ;

(இ) அக விதிகள் ;

(ஈ) தொழிலின் பணிப்பாளர் சபையின் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலரின் நியமனம் அல்லது வேறு ஏதேனும் மாற்றங்கள் ; அல்லது

(உ) மத்திய வங்கியினால் காலத்திற்குக் காலம் நிர்ணயிக்கப்படக்கூடியவாறான ஏதேனும் வேறு கட்டமைப்புசார் மாற்றம்.

போன்றவற்றிலுள்ள ஏதேனும் கட்டமைப்புசார் மாற்றம் பற்றி பத்து வேலை நாட்களினுள் எழுத்து மூலம் மத்திய வங்கிக்கு அறிவித்தல் வேண்டும்.

தொழிலின் பணிப்பாளர் சபையின் அல்லது முதன்மை நிறைவேற்று அலுவலரின் நியமனமொன்று அல்லது வேறு ஏதேனும் மாற்றங்கள் ஏற்படும் சந்தர்ப்பத்தில், பணம் அல்லது பெறுமதி மாற்றல் சேவை வழங்குநரொருவராகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தின் அட்டவணை II இற்கமைவாக சத்தியகூற்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

3. இவ்வொழுங்குவிதிகள் 2025, திசெம்பர் 31 தொடக்கம் நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

EOG 12 - 0216

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது